

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக வர்த்தகர் அணி சார்பில் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தி.முத்து ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, அறந்தாங்கி தலைமை அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து கிப்ட் பாக்ஸ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர், சிவ.வீ.மெய்யநாதன், உதயம் சண்முகம், சக்தி இராமசாமி, வே.பொன்துரை, க.இராஜேந்திரன், இரா.ஆனந்த், சக்திவேல், ஹரி.விமலாதிராஜன் மாவட்ட, ஒன்றிய, நகர, வட்ட, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா!

### கே.ஆர்.என். இராஜேஷ்குமார் எம்.பி. – மருத்துவர் மா.மதிவேந்தன் – ராமலிங்கம் மரியாதை!

*நாமக்கல், ஜூன் 5 -*

நாமக்கல் கிழக்கு மாவட்டம், முழுவதும் ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் முன்னாள் முதலமைச்சரும், திமுக முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாமக்கல் பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின், திருவுருவச் சிலைக்கும், அவரது உருவப் படத்திற்கும் மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்டச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஷ் குமார் தலைமையில், முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் பார்.இளங்கோவன், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிலைக்கு மரியாதை செலுத்தினர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில், தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, கலைஞரின் அரசியல், சமூக மற்றும் தமிழ்ப்பணிகள் குறித்து நிர்வாகிகள் நினைவுகூர்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பழனிவேல், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா ‘செம்மொழி நாளாக’ கொண்டாட்டம்!

### செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

*செஞ்சி, ஜூன் 5 -*

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103வதுபிறந்தநாள் விழா செம்மொழி நாள் கொண்டாட்டம்செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர்கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி 1000நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்

இந்தியாவில் பல்வேறு குடியரசுத் தலைவர்களையும் பிரதம மந்திரிகளையும் உருவாக்கி சுதந்திர தினத்தில் சட்டமன்றதலைமைச் செயலகத்தில் முதலமைச்சர்களுக்கு தேசிய கொடியினை ஏற்றும் உரிமையை பெற்று தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வதுபிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாக சீரும் சிறப்பு மாகவிழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்த நாளைசெம்மொழி நாள் விழாவாக செஞ்சி கூட் ரோட்டில் நடைபெற்றது.

செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான்தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தமுத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் 1000 நபர்களுக்குஅறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் ஜான் பாஷா, சங்கர், சிவகுமார், நூர்ஜகான்ஜாபர், மோகன், சீனிவாசன், பொன்னம்பலம்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் சிங்கம் சேகர் ,ஜே. எஸ். சர்தார், சிவகுமார்,ஜி. டி. தனசேகரன்,முன்னாள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ரிஸ்வான், தொண்டரணி பாஷா, என்.ஆர்.பேட்டைன்னால் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் ராமு,சம்பத்குமார், சந்திரன், கோகுல், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# யாரை திருப்திப்படுத்த கலைஞரின் படம் நீக்கப்பட்டது?

தமிழ்நாட்டில் கல்வியையும் பொது நூலகத்துறையையும் பெரும் இயக்கமாக வளர்த்தெடுத்த கலைஞரின் பிறந்த தினத்தன்று தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நூலகம் ஒன்றிலிருந்து கலைஞரின் புகைப்படம் அகற்றப்பட்டதைப் பற்றி பேச வேண்டிய அவலம் நிகழ்ந்துள்ளது.

ஜுன் 2ஆம் தேதி மாலை சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலக அரங்கில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றில் அரங்கத்தில் மற்ற தலைவர்களின் படங்களோடு வைக்கப்பட்டிருந்த கலைஞரின் படம் அகற்றப்பட்டு பின்னர் ஊடகங்கள் கேள்வி எழுப்பியவுடன் அவசர அவசரமாக திரும்ப மாட்டப்பட்டது.

அந்த அரங்கில் எப்போதும் எம்.ஜி.ஆரின் படமும் இருந்திருக்கிறது. கலைஞரின் படமும் இருந்திருக்கிறது. அங்கு கலைஞரின் படம் இருப்பதில் யாருக்கு என்ன பதற்றம்? யாரை மகிழ்ச்சிப்படுத்த யார் செய்த செயல் இது?

**மனுஷ்ய புத்திரன்**
முன்னாள் தலைவர்
சென்னை
மாவட்ட நூலக
ஆணைக்குழு



பள்ளிக்கல்வித்துறை அமைச்சரை ஒரு பேச்சாளராக நான் நீண்ட நாள் அறிவேன். அவரே அடிப்படையில் ஒரு கலைஞர் பற்றாளர்தான். புத்தகங்களோடும் தொடர்புடையவர் அவர். அவர் விருப்பப்படி இது நடந்திருந்தால் அது கண்டனத்திற்குரியது. அப்படி இல்லாவிட்டால் இது யாருடைய விருப்பப்படி நடந்தது என்பதற்கு அவர் துறைசார்ந்த விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.

பொதுநூலகங்கள், நூலக அரங்குகள் தமிழ்நாட்டின் அறிவுசார் பாரம்பரிய பொதுசொத்துகள் ஆகியவற்றிற்கு எல்லா தலைவர்களுமே பங்களித்திருக்கிறார்கள். அவை உரிய வகையில் நினைவு கூரப்பட வேண்டும்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அ.தி.மு.க. ஆட்சியில் பாழடையவிட்டபோது நீதிமன்றம் கடும் கண்டனங்களை தெரிவித்தது. அந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கலைஞரின் பெயர் இருந்த கல்வெட்டை அன்றைய ஆட்சியாளர்கள் செடிகளை வைத்து மறைத்தார்கள். இதுபோன்ற செயல்கள் வரலாற்றை அழிப்பதுமட்டுமல்ல, அரசியல் மாண்புகளுக்கும் எதிரானது.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் உட்பட பல பிரம்மாண்டமான நூலகங்கள் உருவாக்கப்பட்டன. தமிழ்நாட்டிலுள்ள ஏராளமான நூலகங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் இளைஞர்களின் எதிர்கால கனவுகளுக்கு ஒளியூட்ட அறிவுசார் மையங்களும் திறக்கப்பட்டன.

இந்தப் பங்களிப்பையும் சாதனைகளையும் எவராவது மறுக்க முடியுமா?

நான் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவராகப் பொறுப்பு வகித்த காலத்தில்தான் தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகம் அனைத்து நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு சென்னையின் மையத்தில் இது ஒரு மிகச் சிறந்த அரங்கமாக திகழ்ந்து வருகிறது.

பொது நூலகத்துறையை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளற்று வளர்த்தெடுப்பதுதான் எந்த அரசிற்கும் பெருமை சேர்ப்பதாக இருக்கும்.

கலைஞரின் படத்தை ஒரு பொதுநூலக அரங்கிலிருந்து அகற்றுவதன் வழியாக அவரை மக்கள் இதயங்களிலிருந்து அகற்ற முடியாது. தமிழ்நாட்டின் பொதுநூலக வரலாற்றிலிருந்தும் அகற்ற முடியாது.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவையொட்டி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ். சரவணன் ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் ஆலாபுரம், பொம்மிடி, பி.பள்ளிப்பட்டி, பையந்த்தம், போதக்காடு, மெணசி, பூதநத்தம், கோபாலபுரம் ஆகிய ஊராட்சிகளில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி, கழகத்தின் இரு வண்ண கொடியேற்றி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகள் வழங்கினார். உடன் சக்திவேல், சந்திரன், ஜாகிதாசெரீப், க.பன்னீர்செல்வம், ஜடையன, தாமோதரன் உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.


## குர்பானி விவகாரம்:

# த.வெ.க. அரசு போடும் இரட்டை வேடத்திற்கு ஐ.யூ.எம்.எல். என்ன பதில் சொல்லப் போகிறது?

### திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

**சென்னை, ஜீன் 5 -**

**குர்பானி விவகாரத்தில் த.வெ.க. அரசும் அதன் முதலமைச்சர் ஜோசப் விஜய்யும் போடும் இரட்டை வேடத்திற்கு ஐ.யூ.எம்.எல். என்ன பதில் சொல்லப் போகிறது? என்று திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் - முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் அறிக்கை கேள்வி எழுப்பியுள்ளார்.**



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

சிறுபான்மை இசுலாமிய சமுதாய மக்களின் காவல் அரணாக விளங்கிய தி.மு.க. அரசு இருந்தவரையில் எவ்வித தடையும் தடங்கலுமின்றி நடைபெற்று வந்த பக்ரீத் திருநாள் குர்பானி வழங்கும்நிகழ்வுகளுக்கு, முதன்முறையாக த.வெ.க. ஆட்சியில் இடையூறு ஏற்பட்டு, மக்களின் மனத்தில் அழியா வடுவாக மாறியுள்ளது.

இந்த வடுவை சிறுபான்மையின மக்களுக்கு ஏற்படுத்தி விட்டுத்தான், திருச்சிக்குச் சென்ற மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அவர்கள், “மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருப்பேன்” என்று வெற்றுக் கோஷம் எழுப்பினார்.

காட்சிகளில் நடிப்பதும் ஆட்சி செய்வதும் வெவ்வேறானவை என்பதையே அறியாமல் இருக்கும் அவர், பக்ரீத் தினத்தில் தனிக்குழுக்கள் அமைத்து குர்பானிக்கு தடை ஏற்படுத்தியுள்ளார். போலீசை வைத்து அரட்டி உருட்டி மிரட்டி அந்த திருநாளைச் சோக நாளாக்கிய முதலமைச்சர், ஆட்சி பொறுப்பேற்ற சில நாட்களிலேயே சிறுபான்மையினரின் சுதந்திரத்தில் கைவைத்து விளையாடி விட்டார் என ஒவ்வொரு சிறுபான்மையினரின் மனதிலும் வேதனைத் தீயாகக் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

“எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல்” இப்போது அடுத்த கட்டமாக, நீதிமன்றத்தில் அரசின் சார்பில் “பொது இடங்களில் குர்பானி கொடுப்பதற்குத் தடை விதித்து உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவைக் கவனமாகவும் கண்ணும் கருத்துமாகவும் நிறைவேற்றியுள்ளோம்” எனத் தீர்ப்பை நிறைவேற்றியதற்கான அறிக்கையையும் தாக்கல் செய்திருக்கிறது. சிறுபான்மையினர் நலனில் பதவியேற்ற சில நாட்களில் த.வெ.க. அரசின் உண்மை முகம் வெளிச்சத்திற்கு வந்து விட்டது. “பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது” என்பதுபோல் முதலமைச்சரின் இரட்டை வேடமும் வெளியே வந்து விட்டது.

ஐ.யூ.எம்.எல். சார்பில் த.வெ.க. அரசில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக இருக்கும் மாண்புமிகு ஷாஜஹான் அவர்கள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போகிறோம் என்கிறார். போலீசை வைத்து குர்பானி நடத்த விடாமல் அடக்குமுறை செய்த போது இந்த அமைச்சர் எங்கே உறங்கிக் கொண்டிருந்தார்? ஏன் முதலமைச்சரை உடனே சென்று சந்தித்து இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று கூறவில்லை? சிறுபான்மையினர் மீது போலீஸ் அடக்குமுறையை கைவிடுங்கள் என ஏன் கோரவில்லை? அமைதியாக இருந்து குர்பானியை தடுத்து, அதைத் தடுத்த தீர்ப்பையும் போலீஸ் செயல்படுத்த விட்டு, எல்லாம் முடிந்த பிறகு இப்போது அப்பீல் செய்வேன் என அமைச்சர் கூறுவதற்குக் கூச்சப்பட வேண்டாமா? ஏற்கனவே கிறித்தவ மக்களுக்கு எதிரான FCRAவிற்கு எதிராக ஒரு வார்த்தை கூட கூறாமல், ஒரு கண்டனத்தைக் கூட விடுக்காமல் அமைதி காத்தவர்தான் இதே முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய்.

அவரை நம்பி மதச்சார்பற்ற கொள்கையை நிலைநாட்டப் போகிறோம், பா.ஜ.க ஆட்சிக்கு வருவதை தடுக்கப் போகிறோம் என்று ஓடோடிச் சென்று ஆதரவளித்து அமைச்சர் பதவிக்கு வந்த ஐ.யூ.எம்.எல் சிறுபான்மையின மக்களைக் காப்பாற்றும் லட்சணம் இது தானா?

குர்பானி விவகாரத்தில் நீதிமன்றத்தில் “தீர்ப்பை நிறைவேற்றி விட்டோம்” எனவும், “தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு” எனவும் த.வெ.க. அரசும், அதன் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய்யும் போடும் இரட்டை வேடத்திற்கு ஐ.யூ.எம்.எல். என்ன பதில் சொல்லப் போகிறது? இசுலாமிய மக்களின் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமா?



சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் அப்பம்மசமுத்திரம் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம் மற்றும் இனிப்புகளை ஒன்றியச் செயலாளர் டாக்டர் வே.செழியன் பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்டக் கவுன்சிலர் நல்லம்மாள், பத்திரம் மனோகரன், கருணாநிதி, சேட்டு, ராஜேந்திரன், ராஜவேல், சிவாஜி, சண்முகம், பெரியசாமி, கவிதா, சிவராமன், மோகன்ராஜ், தங்கராசு, பிரபு, அசோக், சந்திரசேகரன், செந்தில், முருகன், இளங்கோ, சதீஷ்குமார், பாரத், ராம்குமார், சுரேஷ், மாது, வீராசாமி, சக்கரவர்த்தி, ரங்கநாதன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு உதகையில் உள்ள நீலகிரி நாடாளுமன்ற அலுவலகத்தில் உதகை நகரச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமையில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் மகேஷ், நந்தி ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர அவைத் தலைவர் ஜெயகோபி, மாவட்டப் பிரதிநிதி வெங்கடேஷ், கழக நிர்வாகிகள் மஞ்சு குமார், விஜயகுமார், அந்தோணி மேத்யூஸ், கவுன்சிலர்கள் செல்வராஜ், கீதா, வனிதா, பிரியா, மேரி ஃப்ளோரினா, ஃப்ளோரினா புஷ்பராஜ், அனிதாலட்சுமி, முன்னாள் கவுன்சிலர் புஷ்பராஜ், கழக நிர்வாகிகள் நிக்கோலஸ், சீனிவாசன், சுரேஷ், உமேஷ், பாபு, மகேஷ், குமார், கணேஷ், சேட், மகளிர் அணி லூயிசா, ஷர்மிளா, சாரதா, பியூலா, ஜெயக்குமாரி, சுசிலா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.